**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 74/2020 |
| Name | : Ravikumar |
| P.W. | : 4 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**02.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் பாப்பான்குளத்தில் வசிக்கிறேன். 19.12.2019 ம் தேதி நான் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் வேலை செய்து கொண்டிருந்த போது இரவு 07.00 மணி அளவில் திருட்டு போனது சம்மந்தமாக மடத்துக்குளம் காவல் நிலைய போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னுடன் ஆறுமுகம் என்பவர் கையெழுத்து போட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் சுமார் 15 வருடங்களாக சர்க்கரை ஆலையில் வேலை செய்தேன். புகார் கொடுத்த நடராஜன், முத்துக்குமார், ஆனந்த மனோகர் ஆகியோர் எனது உயர் அதிகாரிகள்

என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதியில் காவல் நிலையத்தில் ஒரு 10 நபர்களை அழைத்து விசாரித்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். விசாரணைக்கு நானும் வந்திருந்தேன். நான் கையெழுத்து போட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியும். அதை காவல் நிலையத்தில் வைத்து எழுதி கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் மில்லில் எப்போதும் மின்சாரம் இருக்கும் என்றும், மின்சாரம் இல்லாத சமயத்தில் ஜெனரேட்டர் வேண்டும் என்றால் சரிதான்.

(2) நடராஜன், முத்துக்குமார், ஆனந்த மனோகர் ஆகியோர் தான் எங்களை காவல் நிலையம் அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான். அவர்களும் என்னை சாட்சியாக கையெழுத்து போடச் சொன்னார்களா என்றால் ஆமாம். எனது உயர் அதிகாரிகள் மற்றும் போலீசார் கேட்டுக்கொண்டதற்காக காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டுவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.02 17:52:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்